[1995 மார்ச் 28

123—

ஏழைகளுக்கு இலவச இருதய மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சை

*24547— **டாக்டர் எம்.பி. சேகர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புரட்சித் தலைவி குடும்ப நலத் திட்டத்தின் மூலம், குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழைக் குடியிருப்பு வாசிகளுக்கு இலவசமாக இருதய அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குடிசைப் பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்களுக்கு மட்டும் அல்லாமல், தமிழகத்தில் உள்ள அனைத்து ஏழை மக்களுக்கும் இலவசமாக இருதய அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் செயல்பட்டு வருகின்றன.

டாக்டர் எம்.பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத்துறையில் பல மறுமலர்ச்சிகளை மலரச் செய்து திறம்பட செயலாற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், அரசு மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செயல்படுகிறது என்று கூறியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அரிசி விலையைக் குறைத்து புதிய வரியே போடாத பட்ஜெட்டை அளித்து குடிசைவாழ் ஏழை எளிய மக்களின் இதயக் கோயில்களில் எல்லாம் நீங்காத இடத்தைப் பெற்று நிரந்தரமாகக் குடியிருக்கும் நமது மாண்புமிகு முதல்வர் the most super C.M., the most superfast C.M., என எல்லோராலும் போற்றிப் பாராட்டப்படும் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொன்னான, பொற்கால, நிலையான, நேர்மையான, உண்மையான, உறுதியான, ஊழலற்ற, உத்தம, தலைசிறந்த, திறமைமிக்க ஆட்சியில் இந்த அரிய திட்டத்தின் மூலம் இலவச இருதய மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்ததில் எத்தனைப் பேர் பயன்பட்டு உள்ளார்கள்; எவ்வளவு செலவாகியிருக்கிறது; மற்றும் மாவட்டந்தோறும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1995 மார்ச் 28]

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கே இந்த அறுவைச் சிகிச்சை செய்வதற்கான அடிப்படை வசதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இந்தப் பயன்கள் மக்களுக்குக் கிடைக்கின்ற ஏற்பாட்டை நம்மால் செய்ய முடியும். இப்போது செய்து கொண்டிருக்கிறோம். அதேபோல் எவ்வளவு பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்று கேட்டார்கள். அதாவது 2 வகையாக, ஒன்று அரசு மருத்துவமனைகளில் வருகிற ஏழை நோயாளிகளை அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்வது ஒன்று. இரண்டாவது, அவர்கள் குறிப்பிட்ட மருத்துவமனைகளில் இந்த வசதிகள் அடங்கிய தனியார் மருத்துவமனையாக இருந்தாலும் சரி; அல்லது அரசு மருத்துவமனையாக இருந்தாலும் சரி, ஆப்பரேஷன் செய்து கொள்ளக்கூடியவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கப்படுகிறது. ஆகிய இரண்டு வகையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து 1991ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 2054 பேருக்கு 2 கோடியே 26 லட்சம் ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டிருக்கிறது. அரசு மருத்துவனைகளில் மொத்தமாக எவ்வளவு பேருக்கு ஆப்பரேஷன் செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அது நிறைய நடந்து கொண்டிருக்கிற காரணத்தால் ஒவ்வொரு ஆண்டாக நாம் எடுக்க வேண்டியிருக்கிறது. அந்த விவரம் தற்போது இல்லை.

டாக்டர் எம்.பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனைகளில் இந்த இலவச அறுவைச் சிகிச்சையை குறைந்த செலவில் செய்ய, அரசு அறிவுரை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை தனியார் மருத்துவமனைகளில் இதற்காக அவர்கள் எவ்வளவு கட்டணம் வசூலிக்கவேண்டுமென்ற ஒரு கட்டுப்பாட்டை விதிக்கின்ற வழிமுறை நமக்கில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அதை ஒரு வேண்டுகோளாக இதுபோல் இருக்கின்ற நோய்களுக்கு குறிப்பாக ஏழை மக்களுக்கு தனியார் துறையிலும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இலவச சிகிச்சைக் கொடுத்தால் அது பயன் உடையதாக இருக்கும் என்று நாம் அறிவுறுத்தலாம், அவர்களைக் கேட்டுக்

கொள்ளலாம். ஆனால், இப்போதுகூட ஒரு எண்ணம் இருக்கிறது. தனியார் மருத்துவமனைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய அல்லது வழிமுறையைச் செய்யக்கூடிய ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்ற ஒரு வலியுறுத்தல் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் வருகிறபோது கூட, இந்தக் கட்டணத்தை இப்படித் தான் வசூலிக்கவேண்டுமென்று நாம் கட்டாயப்படுத்த முடியாது. வசதிகளை அவர்கள் எப்படி வைத்து இருக்கவேண்டும் என்பதை மட்டும் நாம் வலியுறுத்த முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே, அந்த வகையில் யாரையும் பாதிக்காத வகையில் சட்டத்திற்கு உட்பட்டு அந்த நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அறிவிக்கும் பல்வேறு நலத் திட்டங்களைப் பெறுவதற்கு ஆண்டு வருமானம் ரூபாய் 12 ஆயிரம் என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பது போல், அரசு மருத்துவமனைகளில் இலவசமாக சிகிச்சைப் பெறுவதற்குத் தற்போதுள்ள 499 ரூபாய் என்று மாத வருமானமாக நிர்ணயித்து இருப்பதை ஆயிரம் ரூபாயாக உயர்த்துவதன் மூலம் அதிகமான அரசு அதிகாரிகள் பயன்பெறுவார்கள். இதை அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 500 ரூபாய்க்கு கீழே வருமானம் இருப்பவர்கள் என்று இருந்ததை அதாவது 499 ரூபாய் வரை உள்ளவர்கள் என்று இருந்ததை இந்த அரசு அதை ஆயிரம் ரூபாய் என்று மாற்றியிருக்கிறது. அந்த உத்தரவு இப்போது வழங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நாமத்தில் இலவச அறுவைச் சிகிச்சை ஏழை மக்களுக்குக் கிடைப்பது போல் தமிழ்நாட்டில் மட்டும்தான் இந்தப் புரட்சிகரமான திட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கிறதா; அல்லது வேறு எந்த எந்த மாநிலங்களில் இது நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

1995 மார்ச் 28]

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெயரால் 'மெடிக்கல் கேம்ப்' என்று நாம் நடத்தினோம். குறிப்பாக, பள்ளியில் படிக்கின்ற குழந்தைகளுக்கு 15 வயது வரை இருக்கிற அந்தக் குழந்தைகளுக்கு இந்த முகாம்கள் நடத்தப்பட்டன. இதனால் ஏறத்தாழ 65 லட்சம் பேருக்கு மேல் இப்போது பயன்பெற்று இருக்கிறார்கள். அதிலே யார், யாருக்கு இருதய நோய் இருக்கிறதோ அவர்களை இங்கே சென்னையிலுள்ள குழந்தைகள் மருத்துவமனைக்குக் கொண்டு வந்து, பல நூற்றுக்கணக்கான பேருக்கு அறுவைச் சிகிச்சை இதுவரை செய்யப்பட்டிருக்கிறது. வெற்றிகரமாக முடிந்திருக்கிறது. மற்ற மாநிலங்களில் இதுபோல் தனித் திட்டமாக அவர்கள் செயல்படுத்துவதாகத் தெரியவில்லை. நாம் இதை ஒரு தனித் திட்டமாக எடுத்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். மொத்தமாக மருத்துவமனைக்கு வரக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இப்போது அவர்கள் இருக்கிற இடத்திற்கு நாமே சென்று, நம்முடைய மருத்துவர்களே சென்று, இந்த நோயாளிகள் இருக்கிறார்களா என்று கண்டுபிடித்து அதை earlier stage-இல் கண்டுபிடித்துவிட்டால் சுலபமாக இருக்குமென்ற காரணத்தால் அந்த நடவடிக்கையை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதேபோல, பொதுவாக இருக்கின்ற பொதுமக்களுக்கும் இது நடத்தப்பட்டு இருக்கிறது. எனவே, தொடர்ந்து இந்தத் திட்டங்களை நடத்துவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக் கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். பன்னீர்செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருதய ஆப்பரேஷனுக்காக மத்தியிலும் மாநிலத்திலும் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. ஆனால், நம்முடைய மரியாதைக்குரிய முதல்வர் அவர்களிடம் நான் இருவருக்காக இருதய ஆப்பரேஷன் செய்ய வேண்டுமென்று கேட்டபோது அதற்குப் பணம் வழங்கப்பட்டு விட்டது; நீங்கள் உடனடியாக அந்த இருதய ஆப்பரேஷன் செய்வதற்கான நடவடிக்கைகளைச் செய்யவேண்டுமென்று எனக்குத் தபால் வந்தது. ஆனால், அது மிகவும் துரிதமாக நடைபெறாத காரணத்தால், மிகவும் லேட்டாக நடந்ததால் அவர்கள் இறந்து விட்டார்கள். அவர்களை உடனடியாக அழைத்துச் சென்று முதலுதவி செய்யலாம் என்று இருந்தேன். ஆனால் அவர்கள் இறந்து விட்டார்கள்.

[1995 மார்ச் 28

ஆகவே, இந்த உதவிகளை மிகவும் சீக்கிரமாக செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர் எதற்காக மனு செய்தாலும் அதற்கு ஒரு வழிமுறை இருக்கிறது. அந்த வழிமுறைப்படி முழுமையாகச் செய்தால் அதிலே காலதாமதம் ஏற்படாது. பலபேர் விலாசம்கூட சரியாகக் கொடுப்பதில்லை. எந்த மருத்துவமனையிலே அவர்கள் மருத்துவம் செய்து கொள்ளப் போகிறார்கள் என்பதும் கொடுக்கப்படுவதில்லை. இதற்கென்று சில மருத்துவமனைகள் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. இதிலே தவறுகள் நடந்து விடுகின்றன. அதாவது ஒரு மருத்துவமனையிலே யார் பெயரையாவது கொடுத்துப் பணத்தை வாங்கி விடுகிறார்கள். அதற்குப் பின்னாலே அவர்களுக்கு முறையாக அந்த ஆப்பரேஷன் செய்யப்படுவதில்லை; அல்லது அந்த நோயே அவர்களுக்கு இல்லாமல் இருக்கிறது. இதைப் பரிசோதிக்கிற வாய்ப்பு நமக்கு இல்லை. எனவே, இந்த வசதிகள் எங்கெங்கே இருக்கின்றனவோ அந்த மருத்துவமனைகளில், இந்த மருத்துவமனையிலேதான் செய்யவேண்டுமென்று நாம் கட்டாயப்படுத்துவதில்லை. ஆனால் இதற்கு அடிப்படை வசதி எங்கே இருக்கிறதோ, இருதய ஆப்பரேஷன் என்று சொன்னால் அதைச் செய்கிற வசதி படைத்த எந்தெந்த மருத்துவமனை இருக்கிறதோ, அவர்கள் மனு செய்தால் நாம் அதை அங்கீகரிக்கிறோம். எனவே, அங்கீகரிக்கப்படுகிற மருத்துவ மனையிலேயிருந்து, இவர்களுக்குச் செய்கிறோம் என்று அவர்கள் மனுப் போட்டால் அதை நாம் பார்த்துச் செய்கிறோம். எனவே, மனுப் போடுவதிலே சரியான விளக்கங்களைக் கொடுக்காத காரணத்தால் காலதாமதம் ஏற்பட்டு இருக்கலாமேயொழிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வருகிறபொழுது அதை உடனடியாக அவர்கள் செய்து கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், பலபேர் மருத்துவமனைக்குச் சென்று ஆப்பரேஷன் செய்துகொண்ட பின்னாலேகூட அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதிலே அவர்கள் சரியான விளக்கம் கொடுக்காமல், விளக்கத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நாம் கேட்பதற்குள்ளாக அவர்கள் மருத்துவமனைக்குப் போய் ஆப்பரேஷன் செய்து கொள்கிறார்கள். செய்து கொண்டார்கள் என்று நாம் விட்டுவிடலாம். அதற்குப் பின்னாலேகூட அந்தப் பணத்தை நாம் கொடுத்திருக்கிறோம். எனவே, மனு செய்கிறபொழுது, அந்த மனுவை முறையாக அவர்கள் செய்ய

1995 மார்ச் 28]

வேண்டும். பாஸ்போர்ட் வாங்குகிறோம் என்று சொன்னால் ஒரு சின்ன தவறு செய்தால்கூட திருப்பி அனுப்பி விடுகிறார்கள். நான் அவசரமாக போக இருந்தேன்; நீங்கள் ஏன் சரியாகக் கொடுக்கவில்லை என்று நாம் கேட்க முடியாது. எனவே, மனு செய்கிறபொழுது அந்தத் தவறு நடந்துவிடக் கூடாது என்பதற்காக, முறையாக அதைச் செயல்படுத்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து பணம் கொடுப்பது போன்று, மத்தியிலும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து பணம் கொடுக்கப்படுகின்றதா? அப்படியென்றால் இதுவரையில் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது? நேற்றைக்கு முன்தினம் ஒரு கேஸ் வந்தது. 14 நாள் குழந்தை. அந்த 14 நாள் குழந்தைக்கு 15 நாட்களுக்குள்ளாக ஆப்பரேஷன் செய்யவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சிபாரிசு செய்யவேண்டும் என்று என்னிடத்திலே இருந்து கடிதம் வாங்க வந்தார்கள். ஆகவே, காலதாமதம் நடக்காமல் இருப்பதற்கு தனியார் மருத்துவமனைக்குச் செல்லவேண்டும் என்று கூறுகின்றார்களாமே, அது உண்மைதானா? அப்படியென்றால், அவர்களுக்கு உடனடியாக, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவாவது, அந்த ஏழைகளுக்கு நம்முடைய அரசு மருத்துவமனைகளிலே அறுவைச் சிகிச்சை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே எவ்வளவு கொடுக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அந்தக் கணக்கு என்னிடத்திலே தற்போது இல்லை. ஆனால், மாநில அரசைப் பொறுத்தவரையில் இப்போது நாம் அதைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், நான் யாரையும் குறை சொல்லவில்லை. இதற்கு முன்னாலே எந்த அரசும் கொடுக்காத அளவிற்கு இதிலே மனிதாபிமான அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டப்படி ஏற்கெனவே இருந்தது, 2 ஆயிரம் கொடுக்கலாமா; 5 ஆயிரம் கொடுக்கலாமா என்றெல்லாம் இருந்ததை

மாற்றி, அதை உயர்த்தி இருக்கிறார்கள். காரணம், எவ்வளவோ விலை உயர்வெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இது போதாது என்று உயர்த்தி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; சில நேரங்களிலே மிக மோசமான கேஸ் என்று சொல்லுகிறபொழுது அதையும் மீறி இன்னும் 10 ஆயிரம், 20 ஆயிரம் சேர்த்துக் கொடுக்கலாம் என்றுதான் ஒவ்வொரு முறையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதி இருக்கிறார்களேயொழிய, இதுவரை ஒரு கோப்பைக்கூட, சந்தேகப்பட்டோ அல்லது வேண்டாம் என்று கருதியோ அவர்கள் திருப்பி அனுப்பியதாக சரித்திரமே இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனியாக கவனத்தை இதிலே மிகுந்த அக்கறையோடு செலுத்துகிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கு அடுத்து, மருத்துவமனைகளைப் பொறுத்தவரை, நான் ஏற்கெனவே சொன்னபடி எங்கே இந்த ஆப்பரேஷனைச் செய்வதற்கான வசதிகள் இருக்கின்றனவோ அங்கே அவற்றை உடனடியாகச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அநேகமாக, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இதுவரை கடந்த காலத்திலே எந்தக் காலத்திலேயும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலே இப்பொழுதுதான் நாம் ஒரு மருத்துவ முகாமை நடத்தி, அந்த முகாமிலே யார் யாருக்கு இதுபோல நோய் இருக்கிறது; இன்னொரு ஐந்தாண்டுக் காலம் கழித்தோ, மூன்றாண்டுக் காலம் கழித்தோ அவர்களுக்கு அந்த நோய் பெரிதாகப் போகும். எனவே, அவர்களை ஆரம்ப நேரத்திலேயே கண்டுபிடித்து அவர்களுக்கு ஆப்பரேஷன் செய்வதற்கான வழிவகைகளெல்லாம் செய்யப்படுகின்றன. எனவே, இந்த நடவடிக்கையை இந்த அரசு வந்த பின்னாலேதான் செய்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, எழும்பூரிலே இருக்கின்ற அந்தக் குழந்தைகள் நல மருத்துவமனையிலே நூற்றுக்கணக்கான ஆப்பரேஷன்கள் செய்யப்பட்டு, அந்தக் குழந்தைகள் மிகுந்த சந்தோஷத்தோடு, அவர்களை அழைத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். எனவே, அப்படி அவசரமாக ஏதாவது இருந்தால் நீங்கள் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினால் நிச்சயமாக உடனடியாக அவர்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதையேகூட, மாண்புமிகு உறுப்பினர் மூலமாக நான் பொதுமக்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, அவர்கள் இதைத் தெரிந்து உரிய மருத்துவமனையை அணுகினால், நிச்சயமாக அதற்கு நல்ல பரிகாரம் கிடைக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 மார்ச் 28]

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இருதய நோய்ச் சிகிச்சை சம்பந்தமாக இப்படிக் காலதாமதம் ஆவதால் பல்வேறு நோயாளிகள் இறந்து விடுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். இதையெல்லாம் தவிர்க்கின்ற வகையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் இருதய நோய்ச் சிகிச்சைக்காகவே தனியாக அரசு மருத்துவமனைகளை ஏற்படுத்தி அதிலே முற்றிலும் இலவசமாக சிகிச்சைகள் அளிப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் குறிப்பிட்டதைப் போல, அந்தந்த மருத்துவமனையிலே, ஏற்கனவே இருக்கின்ற மருத்துவமனையை அடிப்படையாக வைத்து, அதே மருத்துவமனையிலே அதற்கான தனிப் பிரிவு — சிறப்புப் பயிற்சி தகுதி பெற்ற மருத்துவர்களால் இயக்கப்பட்டு வருகிறது-- அங்கே இப்பொழுது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு வருமானத்திற்குக் கீழே உள்ளவர்களுக்கு, அதாவது ஆயிரம் ரூபாய்க்குக் கீழே உள்ள அந்த நபர்களுக்கு — அந்த மக்களுக்கு-- இருதய ஆப்பரேஷன் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தனியான மருத்துவமனை என்பது தேவை இல்லை. காரணம், அதிலே வருகிற நோயாளிகளுடைய எண்ணிக்கை குறைவு. எனவே, தனியாக மருத்துவமனை — மகப்பேறு மருத்துவமனை தனியாக வைக்கிறோம்; குழந்தைகள் மருத்துவமனை தனியாக வைக்கிறோம்; ஆனால் இருதய நோயைப் பொறுத்தவரையில் தனியாக ஒரு மருத்துவமனை தேவைப்படாது; நிர்வாகத்திற்கும் சிக்கல் இருக்கும். எனவே, இப்பொழுதே ஏற்கனவே இருந்ததைவிட பல மடங்கு சர்வீஸ், அதிலே நாம் உயர்த்தியிருக்கிறோம்; இம்ப்ரூவ் ஆகியிருக்கிறது. எனவே, இப்பொழுது ஏழை மக்களுக்கு, இதற்கு முன்னாலே அரசு மருத்துவமனைகளிலே இருதய ஆப்பரேஷன் இப்படியெல்லாம் செய்வது என்பதே அரிதாக இருக்கும். இப்பொழுது அதை மிக Common–ஆக நாம் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, அதிலே மிகுந்த கவனத்தோடு இந்த அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 124, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.